மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 18 ம் நாள் வியாழக்கிழமை

இ.மஎண்.09/2023
உள்
இ.ம.எண்.06/2023
உள்
அசல் வழக்கு எண்.99/2015
--------

வட்டாட்சியர் அவர்கள்
வெம்பக்கோட்டை ... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிர்/

சுப்புராஜ் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 17.11.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 09.01.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மைக்கேல்பாரதி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், அசல் மனுவில் கண்ட வட்டாட்சியர் என்று உள்ளதை திருத்தம் செய்து வட்டாட்சியர் திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி என்று சீர்திருத்தம் செய்து அசல் மனுவை விசாரணைக்கு ஏற்க உத்தரவிடக்கோரி 17.11.2023 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:—**

அசல் வழக்கினை மறுதிறப்பு செய்யக்கோரி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது வட்டாட்சியர் என்ற பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்போது வட்டாட்சியராக பணியாற்றி வந்த பணி மாறுதல் செய்யப்பட்டுவிட்டதால் மேற்படி பணிக்கு தற்காலிக வட்டாட்சியராக மாறுதல் செய்யப்பட்டுவிட்டதால் மேற்படி பணிக்கு தற்காலிக வட்டாட்சியராக மட்டுமே இருந்ததால் வட்டாட்சியர் என்று தெரிவித்து மனு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி செயலானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமான ஒன்றாகும். தற்போது நிரந்தரமாக வட்டாட்சியர் நியமிக்கப்பட்டுவிட்டதால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் வட்டாட்சியர் என்று உள்ளதை திருத்தம் செய்து வட்டாட்சியர் திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி என்று சீர்திருத்தம் செய்து அசல் மனுவை விசாரணைக்கு ஏற்க உத்தரவாக வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாதுபோனால் அனேக இன்னலும், இழப்பும் ஏற்படக்கூடும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:—**

மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் மனுவானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் வட்டாட்சியர் என்று உள்ளதை திருத்தம் செய்து வட்டாட்சியர் திருமதி.பாண்டிஸ்வரி என்று சீர்திருத்தம் செய்து அசல் மனுவை விசாரணைக்கு ஏற்ற உத்தரவாக வேண்டியது என்று குறிப்பிட்டுள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. நிரூபண வாக்குமூலத்தை எந்தவொரு காலத்திலும் சீர்திருத்தம் செய்யவோ மாற்றம் செய்யவோ சட்டத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். நிரூபண வாக்குமூலத்தை சீர்திருத்தம் செய்ய முடியாது என்று பல முன்தீர்ப்புகளில் உயர்நீதிமன்றங்கள் குறிப்பிட்டுள்ளன. எனவே, மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல்

செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் இம்மனுவை அபிடவிட்டில் சீர்திருத்தம் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அபிடவிட்டில் சீர்திருத்தம் செய்ய முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு தாக்கல் செய்த காலகட்டத்தில் வட்டாட்சியர் யாரும் இல்லாத காரணத்தினால் வட்டாட்சியர் என்று மட்டும் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளார். தற்போது வட்டாட்சியர் நியமிக்கப்பட்டுள்ளதால் வட்டாட்சியரின் பெயரை குறிப்பிட்டு மனு மற்றும் அபிடவிட்டு தாக்கல் செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரர் அபிடவிட்டில் உள்ள விபரங்களை திருத்துவதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரரால் அசல் மனுவில் கண்ட வட்டாட்சியர் என்று உள்ளதை திருத்தம் செய்து வட்டாட்சியர் திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி என்று சீர்திருத்தம் செய்து அசல் மனுவை விசாரணைக்கு ஏற்க உத்தரவிடக்கோரி 17.11.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், ஒரு மனுவைப் பொறுத்து தரப்பினரின் விபரம் மற்றும் அடையாளத்தை சரியாக குறிப்பிட வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும். இம்மனுவினையும் மனுதாரர் தரப்பினரின் பெயரை சேர்ப்பதற்காக தாக்கல் செய்துள்ளார். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில்

எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அசல் மனுவில் கண்ட வட்டாட்சியர் என்று உள்ளதை திருத்தம் செய்து வட்டாட்சியர் திருமதி.பா.முத்துபாண்டீஸ்வரி என்று சீர்திருத்தம் செய்து அசல் மனுவை விசாரணைக்கு ஏற்க உத்தரவிடக்கோரி 17.11.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.